வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05
06.06.2024 வியாழக்கிழமை
இதழ் : 158
பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## தமிழ் பொது வேட்பாளர் விவகாரம்:

# தமிழ் மக்கள் பொதுச்சபைக்கு ஒருங்கிணைப்பு குழு அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 06

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கும் விடயத்தை கையாளும் வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகளின் கூட்டிணைவுக்கு 'தமிழ் மக்கள் பொதுச் சபை' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அத்துடன், 25 பேரை உள்ளடக்கிய தலைமை ஒருங்கிணைப்பு குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.**



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான விடயங்களை கையாளும் மற்றும் இதற்கு ஆதரவு தெரிவித்த பொது அமைப்புகள் மற்றும் செயல்பாட்டாளர்கள் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் - நாச்சிமார் கோயிலடியிலுள்ள தனியார் மண்டபத்தில் கூடிப் பேசினர்.

83 பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் செயல்பாட்டாளர்கள் பங்கேற்ற கலந்துரையாடலின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

குடிமக்கள் சமூகக் கூட்டிணைவின் 30. 04. 2024 வவுனியா தீர்மானத்தின் தொடர்ச்சியாக இரண்டாவது பொதுச்

11

## 5 மாதங்களில் மட்டும் 25,000 டெங்கு நோயாளர்!



கொழும்பு, ஜூன் 06

நாட்டில் கடந்த ஐந்து மாதங்களில் 25 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டில் 90 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இந்த நிலையில், கடந்த ஜனவரி மாதத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அடுத்து வந்த பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் குறைந்தளவான நோயாளர்களே பதிவாகினர். இந்த நிலையில் மே மாதத்தில் மீண்டும் டெங்கு நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்துடன், டெங்கு நோயால் 9 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று சுகாதார பூச்சியியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் நஜித் சுமணசேன தெரிவித்துள்ளார். (ஐ)

## ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்!

### பாராளுமன்றில் சஜித் பிரேரணை

கொழும்பு, ஜூன் 06

இந்தியாவுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் இந்த சபையில் பிரேரணை ஒன்றை முன் வைக்கிறேன் - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்திய பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கவுள்ள நரேந்திர மோடிக்கு வாழ்த்துத் தெரிவிக்கும்

11

## யாழ். இளைஞர் கொழும்பில் கைதானார்!

கொழும்பு, ஜூன் 06

நீதிமன்றால் வெளிநாடு செல்லத் தடைவிதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்றவேளை நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

தரகர் ஒருவர்

11

### பா. ஜ. கவுக்கு சந்திரபாபு, நிதிஷ் ஆதரவு


# இந்திய பிரதமராக மோடி சனியன்று பதவியேற்பார்

புதுடில்லி, ஜூன் 06

நரேந்திர மோடி இந்தியாவின் பிரதமராக மூன்றாவது முறையாக நாளை மறுதினம் சனிக்கிழமை பதவியேற்கவுள்ளார். இதற்கு வசதியாக அவர் நேற்றைய தினம் தனது பதவியை இராஜிநாமா செய்தார்.

சந்திரபாபு நாயுடுவின்

11



### இரணைமடுக்குளத்தின் பங்கீடு

## யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் அறிக்கையின் பின்னரே முடிவு

கிளிநொச்சி, ஜூன் 06

இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தண்ணீரை வழங்குவது தொடர்பில் நவீன முறையில் ஆய்வு அறிக்கையை 6 மாதங்களுக்குகள் பெற்றுக் கொண்ட பின்னர் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இரணைமடுகுளத்தின் தண்ணீரை பங்கீடு செய்வதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட

11



## 'புதிய விடியல்' உதைபந்தாட்டம் நேற்று நெல்லியடியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 06

டான் தொலைக்காட்சி குழுமம் நடத்தும் 'புதிய விடியல்' உதைபந்தாட்டத்தின் 10ஆவது தொடர் நேற்று நெல்லியடி கொலின்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

யாழ். மாவட்டத்தின் 5 உதைபந்தாட்ட லீக்குகளை சேர்ந்த 54 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் முதல்நாளான நேற்று இரண்டு போட்டிகள் நடைபெற்றன.

முதல் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ்,

11

## தேர்தல் கூட்டணி தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை

### பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 06

அடுத்து வரும் தேர்தல்களில் கூட்டணி அமைப்பது தொடர்பாக எந்தத் தீர்மானத்தையும் பொதுஜன பெரமுன எடுக்கவில்லை என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப் பணி மனையில் எஸ். எம். சந்திரசேன எம். பி. நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே

11

## தமிழ் பொது வேட்பாளர் மூலோபாயம் பயனற்றது

### ஐரோப்பிய தூதுவர்களிடம் சம்பந்தன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 06

"ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் என்ற மூலோபாயம் பயனற்றது. தென்னிலங்கையில் உள்ள தலைவர்களுடன் பேச்சுகளை முன்னெடுத்தே இறுதியான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்", என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பெருந்தலைவர்

11

## உணவுகளின் விலைகள் குறைந்தன!

கொழும்பு, ஜூன் 06

உணவுப்பொதி, கொத்து ரொட்டி, சிற்றுண்டிகள், தேநீர் என்பவற்றின் விலைகள் நேற்று முதல் நடைமுறைக்கு வரும்வகையில் குறைக்கப்பட்டன.

எரிவாயுவின் விலை நேற்று முன்தினம் குறைவடைந் ததைத் தொடர்ந்தே இந்த உணவுகளின் விலைகள் குறைக் கப்பட்டன என்று அகில

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அமெரிக்காவில் எர்க் மார்வெல் என்ற பொதுவுடைமைவாதி ஒருவர் இருந்தார்.

அவருக்கு நண்பர் ஒருவர் இருந்தார். அந்த நண்பருக்கு பொதுவுடைமை கருத்துகள் பிடிக்காது. எனவே, அவர் மார்வெல்லை அடிக்கடி கிண்டல் செய்வதுண்டு.

ஒருநாள் அவர், "நண்பரே, உலகில் எல்லாப் பொருட்களும் பொதுவுடைமை ஆக்கப்பட வேண்டும் என்று கூறுகிறீரே, உமது மனைவியையும் பொது உடைமை ஆக்கச் சம்மதிப்பீரா?" என்று கேலியாகக் கேட்டார்.

உயிருள்ள தன் மனைவியை ஒரு பொருளுடன் ஒப்பிட்டதை மார்வெல் விரும்பவில்லை. எனினும், தன் நண்பரின் வாயடைக்க விரும்பினார்.

அவர் நண்பரிடம் கேட்டார், "தனி உடைமைதான் சிறந்தது என்று சொல்லும் நீர், உமக்கு உரிமையுடைய உன் பெண் குழந்தைகளை நீரே மணந்து கொள்வீரா?" என்று கேட்டார்.

நண்பர் வாயைத் திறக்கவில்லை.!

இனி எழுதப்போகின்ற விடயம் பொதுவுடமைவாதிகள் பற்றியது என்பதால் இந்தக் கதையை எழுதியுள்ளேன். அதற்காக இங்கே எழுதப்போகின்ற விடயத்துக்கும் அந்தக் கதைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை கனடிய ஒட்டாவா மாகாண அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது மட்டுமன்றி, இனப்படுகொலை வாரத்தை அனுசரிக்கவும் உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கியிருக்கின்றது.

இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதை ஒரு நாட்டின் மாகாணம் ஏற்றுக்கொண்டிருப்பது பற்றி முன்னரும் ஒரு தடவை எழுதியிருந்தேன்.

அங்கு வாழும் கனடிய தமிழர்களின் ஒன்றிணைந்த நடவடிக்கை அல்லது முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றியாகவே இதனைக் கருதலாம்.

தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் மட்டும் இனப்படுகொலைக்கு ஆளாகவில்லை. கடந்த ஏழு தசாப்தங்களாகவே சிங்கள - பௌத்த அரசுகளால் திட்டமிட்டு இன அழிப்புக்கு உள்ளாகியதாலேயே சாத்வீக போராட்டங்களில் ஆரம்பித்த தமிழர்களின் விடுதலை போராட்டம் பின்னர், ஆயுதப் போராட்டமாக மாறியது.

அந்தப் போராட்டத்தை நடத்திய பல இயக்கங்கள் இன்று ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கி அரசியல் கட்சிகளாக செயல்பட்டு வருகின்றன.

அவ்வாறு செயல்பட்டு வரும் ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். போன்ற இயக்கங்கள் இன்று தமிழ்த் தேசிய அரசியலில் தவிர்க்க முடியாத கட்சிகளாக இருந்துவருகின்றன. அந்த இயக்கங்களின் தலைவர்கள் இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதால் இலங்கையின் இராஜதந்திர கடவுச்சீட்டுகளையும் கொண்டிருக்கின்றனர்.

ஆனாலும், அவர்கள் எவருக்கும் இன்றுவரை கனடா அரசாங்கம் வீசா வழங்க மறுத்து வருகின்றது. அவர்கள் அங்கு சென்று தமது மக்களை சந்திக்கவும் அவர்களிடமிருந்து பெறக்கூடிய நன்மைகளை பெற்று தாயகத்திலுள்ள தமது மக்களுக்கு வழங்கவும் இன்றுவரை கனடா அரசு அனுமதியை மறுத்து வருகின்றது.

அவர்களுக்கு அவ்வாறு வீசா மறுக்கப்படுவதற்கு காரணம், அவர்கள் முன்னர் ஆயுத இயக்கங்களை நடத்தியது அல்லது அதில் அங்கம் வகித்ததுதான்.

ஒரு நாடு தனது உள்நாட்டு கொள்கை தொடர்பாக சில விதிகளை அமுல்படுத்துவதும், அதனை கடுமையாக வைத்திருப்பதும் தவறான விடயமில்லைத்தான். ஆனால், தமிழ் இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தை விரும்பி தொடங்கியவர்கள் அல்ல. அவ்வாறு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க தூண்டப்பட்டவர்கள்.

ஆனால், ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட இலங்கை அரசாங்கத்தை ஆயுதப் போராட்டத்தின் மூலம் பதவியிலிருந்து வெளியேற்றி, நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஆயுத இயக்கத்தை ஆரம்பித்தவர்கள் ஜே. வி. பி. என்ற மக்கள் விடுதலை முன்னணியினர். அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக கியூபாவில் போராட்டம் நடத்திய புரட்சியாளர் சேகுவேராவின் கொள்கைகளையே தாமும் பின்பற்றுவதாக கூறிக்கொண்டு ஆயுதப் போராட்டத்தில் குதித்த ஜே. வி. பி. இயக்கம், இலங்கை அரசுக்கு எதிராக போராடிய போது அது நடத்திய படுகொலைகள் இன்றும் சிங்கள மக்கள் மனதில் இருக்கின்றன. அதனால்தான், அவர்களால் இன்றுவரை நான்கு லட்சம் வாக்குகளுக்கு மேல் பெறமுடியவில்லை.

ஆனாலும், தற்போதைய அரசியல்வாதிகளின் தவறான நடவடிக்கைகளால், வெறுப்படைந்துள்ள மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்து இருப்பதால் நடக்கவிருக்கும் தேர்தலில் அவர்கள் அதிகமான வாக்குகளை பெறலாம் என்பது வேறு சங்கதி.

இலங்கை - இந்திய அரசுகள் ஈழத்தமிழர் பிரச்னைக்கு தீர்வாக ஒப்பந்தம் செய்து - தமிழர் பிரச்னைக்கு தீர்வாக மாகாண சபைகளை உருவாக்கியபோது, அதற்கு எதிராக அவர்கள் நடத்திய "சன்னதம்" பிரபலமானது. இந்தியாவுக்கு எதிராக அவர்கள் போராடியதும் இந்தியாவுக்கு ஆதரவாக இருந்தவர்களை கொன்று குவித்ததும் பழைய சங்கதிகள்தான்.

ஆனால், அத்தகைய ஆயுத இயக்கம் ஒன்றின் இன்றைய ஜனநாயக பாதையை ஏற்றுக் கொள்ளும் கனடா அரசாங்கம், அதன் தலைவருக்கு மட்டும் வீசா வழங்கி தனது நாட்டுக்கு சென்று முன்னாள் ஆயுததாரிகளான ஜே. வி. பியினரை சந்தித்து நிதி திரட்டவும் பிரசாரம் செய்யவும் அனுமதி வழங்கியிருந்தது.

கனடிய அரசாங்கமும் முன்னாள் தமிழ் ஆயுத இயக்கங்களை ஒரு மாதிரியாகவும், சிங்கள ஆயுத இயக்கத்தை வேறு வகையிலும் கருதுவது ஏன் என்பது இன்றுவரை புரிந்துகொள்ள முடியாதது.!

**ஊர்க்குருவி.**

# வவுனியா உட்பட நாட்டில் 10 தாவரவியல் பூங்காக்கள்

## அமைக்கப்படும் என்று பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 06

வவுனியா உட்பட காலநிலை வலயங்களுக்கு ஏற்ப 10 தாவரவியல் பூங்காக்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இதற்கமைய காலி, வவுனியா, அம்பாறை, பொலநறுவை மற்றும் தெனியா ஆகிய இடங்களில் தாவரவியல் பூங்காக்களை விரிவுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக பிரதமர் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"நாட்டில் 10 தாவரவியல் பூங்காக்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை தாவரவியல் பூங்காக்கள் திட்டமிடப்பட்ட விதத்தில் காலி - அக்மீமன தாவரவியல் பூங்கா, வவுனியா தாவரவியல் பூங்கா, அம்பாறை, பொலநறுவை, தெனியா ஆகிய இடங்களை நாம் இனங்கண்டுள்ளோம். எனவே, பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பயன்படக்கூடிய வகையில் நாம் இதை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்"- என்றார். (எ)

# க. பொ. த. உயர்தர பரீட்சை விடைத்தாள் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூன் 06

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பங்கள் நேற்று முதல் ஏற்றுக் கொள்ளப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்த விண்ணப்பங்களானது ஜூன் மாதம் 19 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk என்ற இணையத் தளத்தின் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# இந்திய ஆசிரியர்களுக்கு இங்கு அனுமதி இல்லை!

## கல்வி அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 06

தோட்டப்புற பாடசாலைகளில் இந்திய ஆசிரியர்கள் பணியாற்றுவதற்காக தனது காலத்தில் எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

சபையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வியமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் -

நான் இந்த அமைச்சுப் பதவியை பொறுப்பேற்ற பின்னர். இந்தியாவில் இருந்து இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கு தன்னார்வ அடிப்படையில் தோட்டப் புறங்களில் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படவில்லை. அதற்கு முன்னர் நடந்திருக்கலாம்.

ஆனால், இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக பயிற்றுவிப்பாளர்கள் குழுவொன்று குறிப்பாக ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்கள் தொடர்பில் 40 - 50 பேர் வரையிலான மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயிற்றுவிப்பாளர்கள் குழுவொன்றுக்கு அனுமதியை பெறும் வகையில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமே எனக்கு தெரியும்-என்றார்.

# தமிழீழத்துக்கான அங்கீகாரம்தான் பொறுப்புக்கூறலுக்கு வழிவகுக்கும்

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவிப்பு

வாஷிங்டன், ஜூன் 06

சட்டபூர்வ தமிழீழத்துக்கான அங்கீகாரம் இலங்கைத் தீவில் பொறுப்புக்கூறலுக்கு வழிவகுக்கும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்களுக்காக ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உட்பட இஸ்ரேல் தலைவர்களை கைது செய்யக்கோரும் துணிச்சலான நடவடிக்கைக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற வழக்குத் தொடுநர் கரீம் கானை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பாராட்டுகிறது.

வழக்குத் தொடுநர் கரீம் கான் கூறியது போன்று, சர்வதேச சட்டம் மற்றும் ஆயுதப் போராட்ட சட்டங்கள் அனைவருக்கும் பொருந்தும் என்பதை நாங்கள் மீண்டும் கோடிட்டுக் காட்டுகிறோம். எந்தவொரு இராணுவமோ எந்தவொரு தளபதியோ எந்தவொரு அரச தலைவரோ குற்றங்களுக்கு தண்டனையின்றி செயல்பட முடியாது.

அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதிபதி தியோடர் மெரோன் மற்றும் அமல் குளூனி உட்பட கலாசார மொழியியல் மற்றும் கலாசார பன்முகத்தன்மை கொண்ட 17 சிறந்த நிபுணர்களை உள்ளடக்கிய சர்வதேச சட்ட வல்லுநர்கள் குழு தங்கள் அறிக்கையில் "எந்தவொரு போரும் சட்டத்தின் கைகளில் இருந்து தப்பமுடியாது என்று கூறியுள்ளார்கள்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக அட்டூழிய சர்வதேசக் குற்றங்களைப் புரிந்த வங்குரோத்து சிறீ லங்கா 15 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வதேச சட்டங்களை புறக்கணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது வேதனையான உண்மை.

எனவே, தமிழினப் படுகொலை, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்களை நடத்திய குற்றவாளிகளை விசாரித்து நீதி வழங்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்துகிறது என்று மேலும் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.06.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பெரும் பின்னடைவை சந்திக்க வேண்டிவரும்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்னும் கோரிக்கை வலுவடைந்து வருகின்றது. மக்கள் மத்தியிலும் அதற்கு ஆதரவான கருத்துகள் பரவலடைந்து வருகின்றன. எனினும், தேர்தல் தொடர்பில் மக்கள் பெரும் ஆர்வத்துடன் இருக்கின்றனர் என்று கூறிவிட முடியாது. தேர்தல் நெருங்கும் போதுதான் மக்களின் ஈடுபாட்டை அறிய முடியும். ஆனால், பொதுவாக தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் கட்சிகள் தொடர்பில் வெறுப்புணர்வும் அதிருப்தியுமே மேலோங்கியிருக்கின்றன. கடந்த பதினைந்து வருடகால அரசியல் நகர்வுகளில் ஏற்பட்ட தோல்வியே இதற்கான காரணமாகும்.

ஆயுதப் போராட்ட காலத்தில் மக்கள் மத்தியில் அரசியல் ஒரு விடயமாக இருந்தது. அரசியல் எழுச்சியின் மீதான ஈடுபாடு மக்கள் மத்தியில் இயல்பாகவே இருந்தது. ஆயுதப் போராட்டத்துக்காக இளைஞர், யுவதிகள் உயிர்களை கொடுத்துக் கொண்டிருக்கும்போது மக்கள் மத்தியில விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு எவரும் பிரத்தியேகமாக பணியாற்ற வேண்டியதில்லை. ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல.

அரசியல் ரீதியில் மக்களை ஒன்றிணைப்பதற்கான பிரத்தியேக செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சதா மக்கள் மத்தியில் அரசியலை பேசுபொருளாக்கும் வல்லமையுடன் கட்சிகள் இயங்க வேண்டும். ஆனால், கடந்த பதினைந்து வருடகால சம்பந்தன் தலைமையிலான அரசியல் முன்னெடுப்புகள் தமிழ் மக்களை பெருமளவு அரசியலிலிருந்து அந்நியப்படுத்தியிருக்கின்றது. மக்கள் பல கட்சிகளாக சிதறடிக்கப்பட்டிருக்கின்றனர் - தொடர்ந்தும் சிதறடிக்கப்படக்கூடிய நிலையிலேயே இருக்கின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில்தான் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளவுள்ளனர். இதுவரையான தேர்தல்கள் எவற்றின் போதும் எதிர்கொள்ளாத சவால்களை இந்தத் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் எதிர்கொள்ளவுள்ளன. ஏனெனில், முதன்முதலாக மூன்று அல்லது நான்கு அணிகளாக தமிழ்த் தேசிய கட்சிகள் பிளவுற்று தேர்தலை எதிர்கொள்ளவுள்ளன. இந்த நிலைமை தமிழ்த் தேசிய அரசியலை பெரும் பின்னடைவுக்குள் தள்ளப் போகின்றது. கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் பெருமளவு ஆசனங்களை பறிகொடுக்கப் போகின்றன.

அரசியல் நிலைமை மிகவும் பலவீனமாக இருக்கின்றது. இதனை எதிர்கொள்வதற்கு தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் நம்பிக்கையூட்டப்பட வேண்டும். பொதுவாக மக்கள் மத்தியில் எழுச்சிகரமான நிகழ்வுகள் ஏற்படும் போதுதான் அவர்கள் புத்துணர்ச்சியுடன் அரசியலால் ஈர்க்கப்படுவார்கள். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுக்கான வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

இந்த முயற்சி அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பானது அல்ல மாறாக, தமிழ் மக்களுக்கான அரசியலை பலப்படுத்தும் ஒரு செயலாகும். மக்கள் ஓர் இலக்கு நோக்கி திரட்டப்படும்போது அவர்களுக்கான அரசியல் பலமடையும். இதன் மூலம் தமிழ் மக்களுக்கான ஜனநாயக பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படும். இன்றைய சூழலில் வடக்கு - கிழக்கின் ஜனநாயக பிரதிநிதித்துவம் அனைத்தும் தமிழ்த் தேசிய கட்சிகள் வசமாக இருக்க வேண்டும். அதுவே தமிழ் மக்களுக்கான அரசியல் பலமாகும்.

# தியாகி பொன். சிவகுமாரன் நேற்று நினைவேந்தப்பட்டார்



யாழ்ப்பாணம், ஜூன் 06

தியாகி பொன் சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

உரும்பிராயில் பொன். சிவகுமாரனின் நினைவிடத்தில் நேற்று நடைபெற்ற நினைவேந்தலில் ஈகைச் சுடரை பொன். சிவகுமாரனின் சகோதரி ஏற்றிவைத்ததுடன் அகவணக்கமும், மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, எம். கே. சிவாஜிலிங்கம், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் மறவன்புலவு க. சச்சிதானந்தன் எனப் பலர் பங்கேற்றனர்.

பொன். சிவகுமாரன் தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் முதன்முதலாக தனது உயிரை ஈகை செய்தவராவார். இராணுவம், பொலிஸாருக்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்கொண்ட இவர் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் சயனைற் அருந்தி - 1975 ஜூன் 05ஆம் திகதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# படைகள் உடைத்த சிவகுமாரனின் சிலையடியிலும் அஞ்சலி நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், ஜூன் 06

இராணுவத்தினரால் உடைத்து வீழ்த்தப்பட்ட பொன். சிவகுமாரனின் சிலைக்கும் மாலை அணிவித்து நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

வலி. கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ஈஸ்வரன், அதன் செயலாளா தனூபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு அகவணக்கம் செலுத்தியதுடன் மாலை அணவித்தும் மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

உரும்பிராய் சந்தை வளாகத்தில் இருந்த பொன். சிவகுமாரனின் சிலையை முன்னர் இராணுவத்தினர் உடைத்து நொறுக்கியிருந்தனர். இந்த சிலை இருந்த இடத்தில் மீண்டும் சிவகுமாரனுக்கு சிலை அமைக்கப்பட்டது.

இந்த சிலையை வலி. கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நிரோஷ் திறந்து வைத்தார்.

(ஐ)

# விமான நிலையத்தில் இரு வர்த்தகர்கள் கைது!

கொழும்பு, ஜூன் 06

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரிப்பணத்தைச் செலுத்தாமல் செல்ல முற்பட்ட இரு வர்த்தகர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மடிக்கணினிகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மதுபானங்களுக்கான வரியை செலுத்தாமல் செல்ல முயற்சி செய்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.


தைானவர்களில் ஒருவர் ஜா-எல உடம்மித்த பகுதியைச் சேர்ந்த 42 வயதான வர்த்த கரும் மற்றையவர் நீர்கொழும்பைச் சேர்ந்த 41 வயதான வர்த்தகரும் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இருவரும் டுபாயிலிருந்து 15 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் 20 மடிக்கணினிகள், 15 புதிய மடிக்கணினிகள், 15 ஐபோன்கள் மற்றும் 21 மதுபானப் போத்தல்களை கொண்டு வந்துள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் பயன்படுத்திய 20 மடிக்கணினிகளுக்கு மட்டுமே வரி செலுத்தியதாக சி.ஐ.டி விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேடம்

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். புதிய மாற்றங்கள் ஏற்படும்.

இடபம்

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். அதிகாரியிடம் வளைந்து கொடுத்துப்போவது நல்லது. இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்படுதல்.

மிதுனம்

குடும்பத்தினருடன் வீண்விவாதங்கள் வந்து போகும். பழைய கடன் பிரச்னை அவ்வப்போது மனசை வாட்டும். சக ஊழியர்களால் நிம்மதி இழப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

கடகம்

குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள் அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கிடைக்கும்.

சிம்மம்

சின்ன சின்ன சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்திக் கொள்வீர்கள். நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

கன்னி

குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

துலாம்

சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

விருட்சிகம்

தன்னம்பிக்கையுடன் செயல்பட தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் அடைவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

தனுசு

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று, வரவு உயரும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

மகரம்

ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

கும்பம்

பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

மீனம்

சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள் வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். வெற்றி பெறும் நாள்.

# நாம் தமிழர், விடுதலை சிறுத்தைகள் அரசியல் கட்சிகளாக அங்கீகாரம்!



சென்னை, ஜூன் 06

நடந்து முடிந்த தேர்தலில் 8.19 சதவீத வாக்குகளை பெற்ற தன் மூலம் நாம் தமிழர் கட்சியும், விடுதலை சிறுத்தைகள் கட்சி 2 தொகுதிகளில் வெற்றி பெற்றதாலும் அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளாக உருவெடுத்துள்ளன.

தேர்தல் ஆணைய விதிப்படி, அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக மாற சட்டப் பேரவை தேர்தலில் 6 சதவீத வாக்குகளுடன் 2 சட்டப் பேரவை தொகுதிகளில் வெற்றிப்பெற வேண்டும் அல்லது மக்களவை தேர்தலில் 6 சதவீத வாக்குகளுடன், ஒரு மக்களவை தொகுதியில் வெற்றி பெற வேண்டும். அல்லது சட்டப்பேரவை தேர்தலில் மொத்த தொகுதிகளில் 3 சதவீத இடங்களில் வெற்றி பெற வேண்டும். அல்லது மக்களவை தேர்தலில் குறைந்தபட்சம் 8 சதவீத வாக்குகளைப் பெற வேண்டும்.

தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பெற 8 சதவீத வாக்குகள் தேவை என்ற நிலையில், 8.19 வீத வாக்குகளை பெற்று அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்ற



அந்தஸ்துக்கு நாம் தமிழர் கட்சி உயர்ந்துள்ளது. அந்தக் கட்சி 35.60 இலட்சம் வாக்குகளை பெற்றது.

இதேபோன்று, விழுப்புரம், சிதம்பரம் தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றதன் மூலம் விடுதலை சிறுத்தைகள் கட்சியும் அங்கீகாரம் பெற்ற கட்சியாக மாறியுள்ளது.

(ஐ)

பாராளுமன்றத் தேர்தல்:

# 28 தொகுதிகளில் அ. தி. மு. கவும் 11இல் பா. ஜ. கவும் இரண்டாமிடம்!

சென்னை, ஜூன் 06

தமிழகத்தில் உள்ள 39 மக்களவை தொகுதிகளில், 28 தொகுதிகளில் அ. தி. மு. கவும், 11 தொகுதிகளில் பா. ஜ. கவும் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளன. ஒருவேளை அ. தி. மு. க. -பா. ஜ. க. கூட்டணி அமைந்திருந்தால், தற்போது பெற்ற வாக்குகள் அடிப்படையில் 17 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கக் கூடும் என தெரிகிறது.

மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் தொகுதிகளில் அமைக்கப்பட்ட மையங்களில் நேற்று எண்ணப்பட்டன. தமிழகத்தில் 39 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கையில் அனைத்து தொகுதிகளையும் தி. மு. க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகள் வெற்றி பெற்றன.

முன்னதாக இந்த தேர்தலில், திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி, பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, அ. தி. மு. க. தலைமையிலான கூட்டணி மற்றும் நாம் தமிழர் கட்சி ஆகிய நான்கு முனை போட்டி நிலவியது.

வாக்குப்பதிவு முடிந்த நிலையில் சில தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு உறுதி என்றும், 17 தொகுதிகளில் 2ஆம் இடத்துக்கான வாய்ப்புள்ளது என்றும் பா. ஜ. க. நிர்வாகிகள் தெரிவித்து வந்தனர். அ. தி. மு. கவோ, அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்றது.

ஆனால், தற்போது வாக்கு எண்ணிக்கை முடிவுகள் வெளியான நிலையில், 39 தொகுதிகளையும் தி. மு. க. தலைமையிலான கூட்டணி கைப்பற்ற, 2ஆம் இடத்தை அ. தி. மு. க. 28 தொகுதிகளையும், பா. ஜ. க. 11 தொகுதிகளையும் பிடித்துள்ளது. மூன்றாம் இடத்தை பொறுத்தவரை, 22 தொகுதிகளில் பா. ஜ. கவும், 6 தொகுதிகளில் நாம் தமிழர் கட்சியும், 11 தொகுதிகளில் அ. தி. மு. கவும் இடம்பிடித்தன.

(ஐ)

# 28 ஆண்டுகளுக்கு பின்னர் கோவையில் தி. மு. க. வெற்றி!

கோவை, ஜூன் 06

மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய கோவை மக்களவைத் தொகுதியை 28 ஆண்டுகளுக்கு பிறகு தி. மு. க. கைப்பற்றியுள்ளது. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படும் கோவை பஞ்சாலைகள், பெரிய மற்றும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் நிறைந்த பகுதியாகும். லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். எனவே, தேர்தல் வெற்றியை நிர்ணயிப்பதில் தொழில் துறையினரின் வாக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

கோவையில் இதுவரை நடைபெற்ற மக்களவைத் தேர்தல்களில் காங்கிரஸ் 5 முறையும், கம்யூனிஸ்ட்கள் 7 முறையும், தி. மு. க, பா. ஜ. க தலா இரு முறையும், அ. தி. மு. க ஒரு முறையும் வென்றுள்ளன. பிரதான கட்சிகளான தி. மு. கவும் அ. தி. மு. கவும் பெரும்பாலும் கோவை தொகுதியை கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கிவிடும்.

இந்நிலையில், 2014இல் நடந்த மக்களவைத் தேர்தலில் தி. மு. க, அ. தி. மு. க. நேரடியாக களமிறங்கின. 2019இல் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டது. இந்நிலையில், 2024 மக்களவை தேர்தலில் கோவையில் திமுக நேரடியாக களமிறங்கியது. தி. மு. க. சார்பில் கணபதி ப. ராஜ்குமார் போட்டியிட்டார்.

அ. தி. மு. க. சார்பில் சிங்கை ஜி.ராமச்சந்திரன், பா. ஜ. க. சார்பில் அதன் மாநில தலைவர் அண்ணாமலை, நாம் தமிழர் கட்சி சார்பில் கலாமணி ஜெகநாதன் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பில் 11 பேர், சுயேச்சைகள் 26 பேர் என மொத்தம் 37 பேர்களமிறங்கினர்.

வாக்கு எண்ணிக்கைமுடிவில், அதிக வாக்குகள் பெற்று திமுக வேட்பாளர் கணபதி ப. ராஜ்குமார் வெற்றிபெற்றார். இதன்மூலம் 28 ஆண்டுகளுக்கு பிறகு கோவை தொகுதியை தி. மு. க. கைப்பற்றியுள்ளது. (ஐ)

# டில்லிக்கு பறந்தார் ஸ்டாலின்



சென்னை, ஜூன் 06

புதுடில்லியில் நடைபெறும் இந்தியா கூட்டணி தலைவர்களின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்க நேற்று டில்லி புறப்பட்டார் முதல்வர் மு. க. ஸ்டாலின்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணி 232 இடங்கள் வெற்றி பெற்றது. தமிழ்நாடு, புதுச்சேரியில் சகல தொகுதிகளையும் தி. மு. க. தலைமையிலான கூட்டணி கைப்பற்றியது.

நாடளாவிய ரீதியில் பா. ஜ. க. தனித்து 240 இடங்களிலும் கூட்டணியாக 293 இடங்களிலும் காங்கிரஸ் தனித்து தலைமையிலான கூட்டணி 232 இடங்களிலும் வெற்றி பெற்றது.

தனித்து எவருக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் ஆட்சியில் திடீர் மாற்றம் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய - உக்ரைன் போரில் ஈடுபடும் படையினரை அழைத்துவர ஏற்பாடு

## இராஜதந்திர உறவுக்கு பாதிப்பில்லாத வகையில் முயற்சி

கொழும்பு, ஜுன் 06

**உக்ரைய்னுக்கு எதிராக போரிடுவதற்காக ரஷ்ய இராணுவத்துடன் இணைந்த இலங்கையின் முன்னாள் இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.**

இதனால், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் குழுவொன்று இந்த மாத இறுதியில் ரஷ்யாவுக்குச் சென்று இலங்கையின் முன்னாள் இராணுவ வீரர்களை இலங்கைக்கு மீண்டும் அழைத்து வருவதற்கான திட்டத்தை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் சமன் வீரசிங்ஹ, பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர மற்றும் காமினி வலேபொட ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்த மாதம் 25ஆம், 26ஆம்,27 ஆம் திகதிகளில் ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகளை மொஸ்கோவில் சந்திக்கவுள்ளனர்.

போர்க்களத்தில் உள்ள இலங்கையின் முன்னாள் இராணுவ வீரர்களை மீட்டுத் தங்களை மீளவும் நாட்டுக்கு வரவழைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி எண்ணற்ற தொலைபேசி அழைப்புகள் வருவதாக கூறப்படுகின்றது.

படையினருக்கு நல்ல ஊதியம் மற்றும் பல சலுகைகள் பெற்றுத்தருவதாக கூறி ஏமாற்றப்பட்டிருப்பதும் தெரிய வந்துள்ளது.

ரஷ்ய - இலங்கை என்ற இரு நாடுகளுக்கிடையில் எதுவித மான பிரச்னையும் இல்லாமல் இந்த விடயத்தை தீர்க்கும் நடவடிக்கையில், இராணுவ வீரர்களை முன்கூட்டியே திருப்பி அனுப்புவதற்கான விடயங்கள் குறித்து விவாதிக்க ரஷ்யா உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளது.

ரஷ்யாவின் கூலிப்படை நிறுவனங்களுக்கு சட்ட விரோதமான ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக இரண்டு ஓய்வுபெற்ற இலங்கை இராணுவ ஜெனரல்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதற்கிடையில் உக்ரைனில் இலங்கைக்கான தூதுவர்கள் இல்லாத காரணத்தினால் ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனில் போரிடும் இலங்கையர்கள் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் செயல்முறையில் சில தடைகள் ஏற்பட்டன.

ஆனால், துருக்கியில் உள்ள இலங்கை தூதரகம், உக்ரைனில் போரிடும் இலங்கையர்கள் பற்றிய விவரங்களைக் கோரி உக்ரைன் வெளியுறவு அமைச்சுக்கு கடந்த சனிக்கிழமை கடிதம் அனுப்பியுள்ளது.

இதனடிப்படையில் முன்னதாக ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் படையில் போரிட்ட இலங்கை வீரர் ஒருவர் உயிரிழந்ததாக தகவல் கிடைத்துள்ளது.

ஆனால், போரில் ஈடுபடுபவர்களின் தற்போதைய நிலை குறித்து தகவல் அறிய முடியாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# போதைப் பொருளுடன் 24 வயது யுவதி கைது!

வவுனியா, ஜுன் 06

வவுனியாவில் 05 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 24 வயது யுவதி ஒருவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி றிஸ்வி தலைமையிலான பொலிஸார் வவுனியா, தோணிக்கல் பகுதியில் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போது விற்பனைக்காக தயார்ப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 05 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டனர்.

இதன்போது குறித்த ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த யுவதியும் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட யுவதியை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# கோயில் கிணற்றிலிருந்து யுவதியின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜுன் 06

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு மடத்துவெளி வயலூர் முருகன் கோயில் கிணற்றிலிருந்து இளம் பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மடத்துவெளி 8ஆம் வட்டாரத்தை சேர்ந்த 27 வயதுடைய சிவகுகானந்தன் சிந்துயா என்ற யுவதியின் சடலமே நேற்று முன் தினம் மீட்கப்பட்டது.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பொலிஸ் ஜீப் கட்டுப்பாட்டை இழந்து வீட்டுக்குள் புகுந்தது!

## 40 மாணவர்கள் மயிரிழையில் தப்பினர்

வவுனியா, ஜுன் 06

வவுனியா, நெடுங்கேணிப் பகுதியில் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த புளியங்குளம் பொலிஸாரின் ஜீப் வீடு ஒன்றுக்குள் புகுந்து நேற்று முன் தினம் மாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

நெடுங்கேணி - புளியங்குளம் வீதியில் பயணித்த புளியங்குளம் பொலிஸ் நிலைய ஜீப் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியோரத்தில் இருந்த வீடு ஒன்றுக்குள் புகுந்துள்ளது.

வீட்டு வேலியை உடைத்துக் கொண்டு சென்ற ஜீப் வீட்டிற்குள் நின்ற மோட்டர் சைக்கிள், வீதியோர மின்சாரத்தூண், வீட்டு குடிதண்ணீர் இணைப்பு என்பவற்றை சேதப்படுத்தியுள்ளது.

இதன்போது அருகில் உள்ள கொட்டகையில் படித்துக் கொண்டிருந்த சுமார் 40 வரையான மாணவர்கள் மயிரிழையில் தப்பியுள்ளனர்.

விபத்தின்போது புளியங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட 5 பேர் சிவில் உடையில் வாகனத்தில் இருந்ததாக விபத்து இடம்பெற்ற பகுதியில் இருந்த மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் பொது மக்கள் குவிந்ததும் பொலிஸார் அங்கிருந்து நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திற்குள் சென்றுள்ளனர்.

நெடுங்கேணி பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், ஜீப் வண்டியை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

விசேட அதிரடிப்படையினரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)



# அநுராதபுரம் மாவட்டத்தில் மூடப்பட்ட 15 பாடசாலைகள்

கொழும்பு, ஜுன் 06

அநுராதபுரம் மாவட்டத்தில் 2010ஆம் ஆண்டு முதல் இன்று வரை 15 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

போதிய எண்ணிக்கையான மாணவர்கள் இல்லாத காரணத்தினால் இந்த பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூடப்பட்ட பாடசாலைகளில் சில பிரதேச செயலகங்கள் மற்றும் மாணவர் படை போன்ற அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இப்பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், முன்பள்ளிகளுக்கு சில வகுப்பறைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுசில் பிரேம ஜயந்த கூறினார். (அ)

# ஹங்வெல்ல பாலத்துக்கு கீழ் சிக்கிய 30 மில்லியன் ரூபா பெறுமதியான நீர் அளவீட்டு மானி கடற்படையால் மீட்பு!

கொழும்பு, ஜுன் 06

ஹங்வெல்ல பாலத்துக்கு கீழ் சிக்குண்டிருந்த நீர்ப்பாசன திணைக்களத்துக்கு சொந்தமான பெறுமதிமிக்க நீர் அளவீட்டு மானி ஒன்றை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

சுமார் 30 மில்லியன் ரூபா பெறுமதியான நீர் அளவீட்டு மானியே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

களனி ஆற்றின் நீரின் அளவு, நீரின் வேகம், நீரின் திசை என்பவற்றின் தரவுகளை சேகரிப்பதற்காக, இந்த ஜி.பி.எஸ் நீர் அளவீட்டு மானி நீர்ப்பாசன திணைக்களத்தினால் பொருத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த சில தினங்களாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்குண்டு, இந்த நீர் அளவீட்டு மானி நீரில் அடித்துச் செல்லப்பட்டது.

இதையடுத்து, குறித்த ஜி.பி.எஸ் நீர் அளவீட்டு மானியை மீட்பதற்கு, நீர்ப்பாசன திணைக்களம், கடற்படையின் உதவியை நாடியுள்ளது.



இதையடுத்து, கடற்படையின் சுழியோடிகள், குறித்த கருவியை கண்டுபிடிப்பதற்கான தேடுதல்களை ஆரம்பித்திருந்தனர்.

கடும் வெள்ள நிலைமையையும் பொருட்படுத்தாது, நீரில் இறங்கி, இந்த கருவியை கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட நீர் அளவீட்டு மானி, நீர்ப்பாசன திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரங்கே பண்டாரவின் கருத்து மக்களை திசைதிருப்புகிறது

## மகிந்த தேசப்பிரிய விசனம்

கொழும்பு, ஜூன் 06

**உண்மையான ஜனாதிபதித் தேர்தலுக்குப் பதிலாக போலியான வாக்கெடுப்பு நடத்துவது போன்ற அறிக்கைகளை வெளியிடுவது மக்களின் கவனத்தை தேவையற்ற விடயங்களுக்கு திசை திருப்புவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**



பொது வாக்கெடுப்பை நடத்தி பொதுத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே மகிந்த தேசப்பிரிய இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்து கருத்துரைத்த மகிந்த தேசப்பிரிய-

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமானால், அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக சட்டமூலமொன்றை வரைந்து, உயர் நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று, அது அரசியலமைப்புடன் ஒத்துப்போகிறதா என்பதை ஆராய்ந்து, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பொது வாக்கெடுப்பு நடத்தலாம்.

அத்துடன், சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இருக்குமாயின், ஜனாதிபதித் தேர்தலை நேரடியாக நடத்தி வெற்றி பெறமுடியுமாயின், ஏன் பொதுவாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

மறுபுறத்தில், வாக்கெடுப்பு தோல்வியடைந்தால், மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டியிருக்கும். அது இரண்டு செலவுகள்.

மேலும் பொதுவாக்கெடுப்பு என்பது பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு எந்த வகையிலும் மாற்றீடாக இருக்காது.

எனவே, உண்மையான ஜனாதிபதித் தேர்தலுக்குப் பதிலாக போலியான வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், சில சமயங்களில் நான்கு தேர்தல்களை நடத்த வேண்டியிருக்கும்.

இது நடக்காத ஒன்றை பேசுவது போல் உள்ளது. இந்த சர்வஜன வாக்கெடுப்பு கருத்து வெளிப்பாடானது மக்களின் கவனத்தை தேவையற்ற விடயங்களுக்கு திசை திருப்புவதாகவே நான் கருதுகிறேன்-என்றார். (அ)

# உயர் நீதிமன்றம் அறிவித்த திருத்தங்களை ஏற்கிறோம்!

## அமைச்சர் காஞ்சன விஜயசேகர அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 06

உத்தேச மின்சார சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து திருத்தங்களையும் ஏற்றுக்கொள்வதாக மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சக்தி அமைச்சர் உத்தியோகபூர்வ எக்ஸ் பதிவில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, உயர் நீதிமன்றத்தால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் பாராளுமன்ற குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)



# பாரதிய ஜனதா கூட்டணிக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து!

கொழும்பு, ஜூன் 06

இந்திய மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளுக்கு அமைய நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் செழிப்பு ஆகியவற்றின் மீதான இந்திய மக்களின் நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் தொடர்ச்சியான வளர்ச்சியை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# காணாமல்போன அரச வாகனங்களை அடையாளம் காண விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 06

காணாமற்போன அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்களை அடையாளம் காண்பது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த சில வருடங்களில் சில பொது நிறுவனங்களில் இருந்து காணாமல் போனதாகக் கூறப்படும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள 5,000 இற்கும் மேற்பட்ட அரசுக்கு சொந்தமான வாகனங்களை கண்டுபிடிப்பதன் அவசியத்தை தேசிய கணக்காய்வு அலுவலகம் அண்மையில் வலியுறுத்தியிருந்தது.

இந்த நிலையிலேயே காணாமற்போன வாகனங்களை அடையாளங்காண்பது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறையில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 06

சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று நாட்டின் பல பகுதிகளிலும் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் கோவில் துறைமுகப் பகுதியில் விழிப்புணர்வு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "பாரம்பரிய மீனவர்களின் கடற்றொழிலை பாதிக்கும் அட்டைப் பண்ணையை உடன் நிறுத்து, மீனவர்களின் வயிற்றில் அடிக்காதே, மீனவர்களை வாழவிடு" என்ற பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினரின் ஒருங்கிணைப்பில், பொது அமைப்புகள், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர். (அ)



# பொருளாதார சீரமைப்பு சட்டமூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல்

கொழும்பு, ஜூன் 06

இலங்கை ஒற்றையாட்சி அரசின் வர்த்தமானியில் சமீபத்தில் வெளியிடப்பட்ட பொருளாதார மாற்றத்துக்கான சட்டமூலத்தின் சரத்துக்களை எதிர்த்து உயர் நீதிமன்றில் விசேட தீர்மான மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை மாத்திரமல்ல வாக்கெடுப்பு மூலம் மக்களின் விருப்பம் அறியப்பட வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

சட்டமூலத்தில் முன்மொழியப்பட்டுள்ள சில பகுதிகளில் "இலங்கை சோசலிச குடியரசு" என்ற அடிப்படையில் இருந்து "புதிய தாராளமய அரசு" என்ற தன்மைக்கு மாற்ற முயற்சிப்பதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார்துறையைச் சேர்ந்த முறையான மற்றும் முறைசாரா தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து இம் மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

பொருளாதார மறுசீரமைப்புச் சரத்துகள் தொழிலாளர்கள் மற்றும் குறிப்பாக இளம் தொழிலாளர்கள் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச் சட்டமூலத்தன் நேரடி விளைவுகளை எதிர்கொள்ளும் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள் மற்றும் குறிப்பாக இளம் தொழிலாளர்களுடன் அரசாங்கம் கலந்தாலோசிக்கவில்லை என்றும் குறித்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் மூலதனத்தின் இலவச ஓட்டத்தை ஊக்குவிக்கிறது, கட்டுப்பாடற்ற வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கிறது மற்றும் பொருளாதாரக் கொள்கை வகுப்பில் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் பங்களிப்பை குறைப்பதாகவும் மனுவில் ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தை தீர்மானிக்கும் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்துக்குரிய முழு அதிகாரங்களும் சட்ட மூலத்தின் பிரகாரம் உருவாக்கப்படவுள்ள பொருளாதார ஆணைக்குழுக்குக்கு மாற்றப்படவுள்ளது.

ஆகவே இச் சட்ட மூலம் இறைமையுள்ள இலங்கை அரசின் அடிப்படைத் தன்மையை மாற்றுவதால், அரசியலமைப்பில் உள்ள பொருளாதாரம் பற்றிய சரம் ஒன்றை மீறுவதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

என்ன அவசியத்துக்காக இந்தப் புதிய பொருளாதார மறுசீரமைப்புச் சட்டம் தேவை என்பது பற்றிய பொருள் விளக்கங்கள் சட்டமூலத்தில் இல்லை என்று மனுவைத் தாக்கல் செய்த பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

முன்னுரை மற்றும் பிரிவுகள் 2, 3 மற்றும் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டமூலத்தின் நோக்கத்தை ரணில் அரசாங்கம் எவ்வாறு அடைய விரும்புகிறது என்பதைச் சட்டமூலம் தெளிவாகக் குறிப்பிடவில்லை என்றும் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# குணதிலக ராஜபக்ஷவுக்கு வலதுகாலில் சத்திர சிகிச்சை

கொழும்பு, ஜூன் 06

ஆளும் கட்சி பாராளுமன்ற குழுக் கூட்டத்தின் போது, ஏற்பட்ட மோதல் காரணமாக நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷவுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மோதலில் அவரது வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டம் இடம்பெற்றிருந்தது.

இதன்போது, கண்டி மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு விவகாரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷவிற்கும், மஹிந்தானந்த அளுத்கமகேயுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தம்மை தாக்கியதாக பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தாம் அவர் மீது எவ்வித தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில், ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குணதிலக்க ராஜபக்ஷவை சமாதானப்படுத்த முற்பட்டுள்ளனர்.

இதன்போது அவர் கீழே வீழ்ந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு இல்லை!

## கடும் நெருக்கடியில் கிராம உத்தியோகத்தர்கள்

கொழும்பு, ஜூன் 06

**வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்த முகாம்களுக்குச் செல்லாமல் சில வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கு சமைத்த உணவு வழங்கக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அரசாங்கத்தின் சுற்றறிக்கையால் கிராம உத்தியோகத்தர்கள் கிராமத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கிராம உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ளவர்களுக்கு மட்டுமே சமைத்த உணவு அரசாங்கத்தினால் வழங்கப்படும் என அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த வீடுகளில் தங்கியுள்ள மக்களும் அரசாங்கத்தினால் சமைத்த இந்த உணவை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அவர்கள் முகாம்களுக்கு வரவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை திருத்தப்படவேண்டும் என கிராம அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த அனர்த்த முகாமைத்துவ சுற்றறிக்கை நிறைவேற்றப்பட்டதன் காரணமாக, இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இல்லாத இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவுக்கான அரச ஒதுக்கீட்டை ஒதுக்குவதற்கு மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் முன்வருவதில்லை என கிராம அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலைமையினால் இடம்பெயர்ந்த முகாம்களில் இல்லாத இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு வழங்குவதற்கு கிராம மக்கள் மற்றும் வசதி படைத்தவர்களின் உதவியை நாட வேண்டியுள்ளதாக அவர்கள் மேலும் கூறினர்.

வெள்ளத்தினால் இடம்பெயர்ந்தவர்களில் 90 வீதமானவர்கள் அருகில் உள்ள உறவினர்கள் அல்லது நண்பர்களின் வீடுகளில் தங்கியிருப்பதாகவும், கிராமத்தில் கோவில்கள் மற்றும் பாடசாலைகளில் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களில் எவரும் இல்லை எனவும் கிராம அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கம் ஒதுக்கும் பணத்தில் 450 ரூபாய்க்கு மூன்று வேளை உணவும், 2 தேனீரும் கொடுக்கப் போதாது. இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, உடைகள், பெண்களுக்கான சுகாதார உடைகள் மற்றும் குழந்தைகளுக்கு உடைகள் வழங்குவதற்கு அவர்கள் வசதிபடைத்தவர்களை தேட வேண்டும். இடம்பெயர்ந்தவர்களை இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு சாப்பிட வருமாறு கேட்டால் கிராம அதிகாரிகளை தாக்குவார்கள் என கிராம அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2022ஆம் ஆண்டு முதல் உள்ள இந்த சுற்றறிக்கையை திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என கிராம அலுவலர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# தேசிய வைத்தியசாலையாக மாற்ற போதியளவு ஆளணி வசதி வேண்டும்

## யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 06

யாழ். போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கு ஆளணிகள் தேவையாகவுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் 04 ஆவது தேசிய வைத்தியசாலையாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தரமுயர்த்தப்படுவதாக தெரிவிக்கபட்டிருந்தபோதிலும் அதன் தேவைகள் நிலைப்பாடு பற்றி சுகாதார அமைச்சிடம் அறிவித்திருக்கின்றோம்.

1350 படுக்கைகளுடனான விடுதியும், 325 வைத்தியர்களும், 680 தாதியர்களுமாக மொத்தமாக 2,150 நபர்கள் கடமை புரிந்து வருகின்றனர். தேசிய வைத்தியசாலையாக்குவதற்கு 200 மேலதிக தாதியர்கள் ஆளணியும், 100 வைத்தியர்கள் ஆளணியும் தேவையாகயுள்ளது.

இவ்வாறு அதிகரிப்பு செய்யப்படும்போது தேசிய வைத்தியசாலையாக மாற்ற சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் 320 வைத்திய நிபுணர்கள் சேவையாற்றி வருகின்றனர். வைத்திய வெற்றிடங்கள் அநேகமானவை நிரப்பட்டுள்ளன. மேலும் சில நிபுணர்கள் பற்றாக்குறையாக காணப்படுகின்றது.

சிறப்புப் பிரிவுகளுக்கு குறைந்தது நூறு வைத்தியர்கள் தேவையாகயுள்ளது. இருதய சிகிச்சைப் பிரிவு, இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு போன்ற வைத்திய துறைக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது. அதற்கான ஆளணி பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய சுகாதார அமைச்சு முழுமையான பங்களிப்பினை வழங்கவேண்டும்-என்றார். (அ)

# 'இந்திய ஆசிரியர்களின் கதை முற்றிலும் பொய்'

கொழும்பு, ஜூன் 06

இந்தியாவில் இருந்து வந்த இரண்டாயிரம் ஆசிரியர்கள் மலையக பாடசாலைகளில் சேவையில் ஈடுபடுவதாக வெளியாகியுள்ள தகவல்கள் முற்றிலும் பொய்யானது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவினால் தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பில் கருத்துரைத்த போதே வேலுகுமார் எம்.பி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறித்த கருத்து முற்றிலும் பொய்யாகும். அவ்வாறு இந்தியாவில் இருந்து ஆசிரியர்களுக்கு எந்தவித அனுமதியும் வழங்கப்படவும் இல்லை. இரண்டாயிரம் இந்திய ஆசிரியர்கள் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவும் இல்லை. அது முற்றிலும் பொய்யான தகவலே என்று பொறுப்புடன் கூறுகின்றேன்-என்றார். (அ)

# பாதிப்படைந்துள்ள கிராமிய வீதிகளை சீரமைப்பதற்கு 3 பில்லியன் ரூபாய் நிதி!

கொழும்பு, ஜூன் 06

சீரற்ற காலநிலையினால் பாதிப்படைந்துள்ள கிராமிய வீதிகளை சீரமைப்பதற்கு 3 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த ஆண்டு தேர்தல் ஆண்டாக அமையும் என்ற எதிர்பார்ப்பு உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.(அ)

# டயானா கமகே விவகாரம் சஜித் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 06

இலங்கை குடியுரிமை இல்லை என அறிந்த பின்னரும் டயானா கமகேயை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்த காரணத்தால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருக்கு எதிராக மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டமூலத்தை மீறியுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்து சமூக செயற்பாட்டாளர் ஓஷல ஹேரத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இதற்கு முன்னர் ஓஷல ஹேரத் மூலம் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு உத்தரவாக, பிரித்தானிய குடியுரிமைக் கொண்டிருந்த காரணத்தால் டயானா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோனது.

இதேவேளை, டயானா கமகேவுக்கு இலங்கை குடியுரிமை இல்லை என தான் கடந்த 2020ஆம் ஆண்டிலேயே சஜித் மற்றும் மத்தும பண்டார ஆகியோரிடம் தெளிவான சாட்சியங்களுடன் அறிவித்ததாக ஓஷல ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர்களுக்கு அறியப்படுத்துவதற்கு மேலதிகமாக தான் அவர்களை குறித்த வழக்குகளுக்கு எதிர் மனுதாரர்களாக பெயரிட்டுள்ளதாகவும் அந்த வழக்குகளில் அவர்கள் முன்வைத்த காரணங்களிலிருந்து டயானா கமகேயுக்கு இலங்கை குடியுரிமை இல்லை என அவர்கள் நன்கு அறிந்தது தெரியவந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

டயானா கமகே, சஜித் பிரேமதாச மற்றம் ரஞ்சித் மத்தும பண்டார ஆகிய மூவரும் பாராளுமன்ற தேர்தல் சட்டமூலத்தை மீறி செயற்பட்டுள்ளதாக தெளிவாகும் நிலையில் இது போன்ற தவறுகள் மீள நடைபெறாமலிருக்க மூவர் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்ததாக ஓஷல ஹேரத் தெரிவித்தார். (அ)

# இந்த ஆண்டின் இறுதிக்குள் நாடு வங்குரோத்திலிருந்து மீண்டுவிடும்!

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 06

இவ்வாண்டின் இறுதிக்குள் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிடும் என்றும் இரண்டாம் உலகப் போரில் இங்கிலாந்து செய்தது போல், அனைவரும் ஒன்றாக இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் ருவன்வெல்ல இல்லத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

வங்குரோத்து அடைந்துவிட்டாதாக அறிவித்திருக்கும் அரசாங்கத்தினால் மக்களுக்கு எவ்வாறு இந்தளவு சலுகைகளை வழங்க முடியும் என சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

உறுமய, அஸ்வெசும, அரிசி மானியம் வழங்கும் திட்டங்கள் நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலையில் இருந்தபோது ஏன் செயற்படுத்தப்படவில்லை என்றும் கேட்கிறார்கள்.

அதேபோல், அரசு ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் சம்பள உயர்வு வழங்கினோம்.

2015 இற்குப் பிறகு இவ்வாறான சம்பள உயர்வு வழங்கப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஏனைய தலைவர்கள் ஓடுவதற்கு சப்பாத்து தேடிக்கொண்டிருந்த வேளையில், நான் செருப்புக் காலோடு சென்று ஆட்சியைப் பொறுப்பேற்றேன். அது மட்டுமன்றி, சரியான கொள்கையின்படி செயற்பட்டோம். அதனால் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுத்தோம்.

இரண்டு வருடங்களில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப மிகவும் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. வரி அதிகரிப்பு இலகுவானதாக இருக்கவில்லை.

ஆனால் அது மட்டுமே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஒரே வழியாக விளங்கியது.

நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு அனைவரிடத்திலும் கோரிக்கை விடுத்திருந்தேன்.

ஒரு சிலர் அதற்கு முன்வரவில்லை. முடிந்தளவில் நான் எல்லோரையும் ஒன்றிணைத்துக் கொண்டு முன்னோக்கிச் சென்றேன். முதன்முறையாக அரசியல் சாராத அமைச்சரவையொன்று அமைக்கப்பட்டது. கட்சி பேதமின்றி நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம்.

குறுகிய மனப்பான்மை இன்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். எரிபொருளும் உரமும் கிடைத்தாலும் நல்ல விளைச்சல் கிடைத்தாலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து இன்னும் நாம்முழுமையாக விடுபடவில்லை.

இந்த ஆண்டு இறுதிக்குள் வங்குரோத்து நிலையில் இருந்து மீளக்கூடிய சாத்தியம் உள்ளது.

ஆனால் அது போதாது. நமது நாட்டில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

எனவே எமது பொருளாதார இலக்குகளின்படி சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பலஸ்தீனம் குறித்து ஆய்வு மாநாடு

## நடத்தக்கோருகிறார் விரிவுரையாளர் அன்ஸார்

நிந்தவூர், ஜூன் 06

**இஸ்லாமிய வரலாற்றில் பலஸ்தீனம் ஓர் இதயமாகத் திகழ்வதாலும் மூன்றாவது புனிதஸ்தலமான மஸ்ஜிதுல் அக்ஸா அங்கு அமைந்திருப்பதாலும் இதன் ஆரம்ப வரலாறு, போராட்டங்கள் நடைபெற்ற பின்னணி மற்றும் அதன் புதிய பரிமாணங்கள் தொடர்பில் ஓர் ஆய்வு மாநாட்டை நடத்தி, உரிய தெளிவூட்டல்களை மேற்கொள்ள தென்கிழக்கு பல்கலைக்கழகம் முன்வர வேண்டும்- இவ்வாறு மருதமுனை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்ஷெய்க் எப். எம். ஏ. அன்ஸார் மௌலானா வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

மருதமுனை ஜும்ஆப் பள்ளிவாசலில் பலஸ்தீன் தேசத்துக்காக ஐவேளைத் தொழுகைகளிலும் ஓத வேண்டிய குனூத் நாஸிலாவை அறிமுகம் செயது வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

2012 வரை ஐ. நா. பொதுச் சபையில் வெறும் பார்வையாளர் அந்தஸ்தில் இருந்த பலஸ்தீனம் 2024 ஆம் ஆண்டு சுதந்திர இறைமையுள்ள தனி நாடாக மாறும் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இரத்துச் செய்யும் அதிகாரத்தை அமெரிக்கா கையில் எடுத்தால் அதற்கான மாற்று வழிமுறையை சர்வதேச இஸ்லாமிய சமூகம் முன்னெடுப்பது அவசியமாகும். இதற்கு குறித்த ஆய்வு மாநாட்டின் மூலம்

தெளிவையும் தீர்வையும் பெறலாம் என்று சிவில் சமூகங்கள் எதிர்பார்க்கின்றன. ஆகையால் இனியும் தாமதியாமல் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பலஸ்தீனம் தொடர்பிலான ஆய்வு மாநாடு ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் முன்வர வேண்டும். இதற்காக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, சட்டத்தரணிகள் சங்கம், பள்ளிவாசல்கள் சம்மேளனம் போன்ற சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக குரல் கொடுக்க வேண்டும்- என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

(எ-6)



# இரு விழிகளையும் இழந்த மாணவன் பிரஷோபன் பரீட்சையில் சாதனை

மட்டக்களப்பு, ஜூன் 06

மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட அரசடித்தீவைச் சேர்ந்த முன்னாள் போராளியின் மகனான பாலச்சந்திரன் பிரஷோபன் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் 2 ஏ , 1 பி, சித்திபெற்று ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாக சித்தியடைந்துள்ளார்.

மட்டக்களப்பு தரிசனம் விழிப்புணர்வற்றோர் பாசாலையிலும், கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரியிலும் இவர் கல்வி பயின்றுள்ளார்.

இம் மாணவனின் சாதனையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு வலய கல்விப் பணிமனையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளரும்,கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருமான திருமதி சுஜாதா குலேந்திரக்குமார் தலைமையில் இடம் பெற்ற பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் மாணவனின் தாய், கல்விப்ரபணிமனை உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

(அ)



# மீனோடைக்கட்டு பிரதேசத்தில் பஸ் தரிப்பு நிலையம் அமைப்பு

மட்டக்களப்பு, ஜூன் 06

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட மீனோடைக்கட்டு பிரதான வீதியில் பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

ஏ.சி.என். நிறுவனத்தின் பணிப்பாளரும், சமூக சேவையாளருமான ஏ.சி.நியாஸின் வேண்டுகோளுக்கினங்க மேற்படி பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட பிரதேசத்தில் பாடசாலை , கோட்டக் கல்விப் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் ஜும்மா பள்ளிவாசல், நீர்ப்பாசன திணைக்களம் என பல்வேறுபட்ட காரியாலயங்கள் இங்கு காணப்படுகின்றன. இவ்வாறான பொது ஸ்தாபனங்கள் இருக்கத்தக்க நிலையில் பஸ் தரிப்பிடம் இல்லாத காரணத்தினால் பொதுமக்களும், அரச ஊழியர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

(அ)

# உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற கல்முனை பஹ்ரியா மாணவர்கள் கௌரவிப்பு

கல்முனை, ஜூன் 06


கல்முனை கல்வி வலய அல் - பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் இருந்து 2023 கல்வியாண்டில் கலை பிரிவில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழகம் செல்லத் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம். எஸ். எம். பைசால் தலைமையில் பாடசாலையில் இடம் பெற்றது.



க. பொ. த. உயர்தரப் பிரிவு பகுதித் தலைவர் யூ.எல். செய்னுலாப்தீனின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தினரால் சிறந்த சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டன.

(எ)

# சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு காரைதீவில் சிரமதானம் முன்னெடுப்பு



காரைதீவு, ஜூன் 06

தேசிய சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு காரைதீவில் பாரிய சிரமதானப் பணி பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது.

ஜூன் 03 சுற்றாடல் தூய்மைப்படுத்தல் தினம். இதனை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை, காரைதீவு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தினர், காரைதீவு பொலிஸ் நிலையம் மற்றும் பொதுமக்களின் சிறந்த ஒத்துழைப்போடு இச் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

(எ)

# அதிகாலையில் மினி சூறாவளியால் தூக்கி வீசப்பட்ட 6 படகுகள் சேதம்!

வாகரை, ஜூன் 06

மட்டக்களப்பு வாகரை காயான்கேணி கடற்கரை பிரதேசத்தில் நேற்று அதிகாலை வீசிய மினி சூறாவளியால் படகுகள் சில சேதமடைந்துள்ளதாக மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வழக்கத்துக்கு மாறாக கடற்கரையில் நேற்று அதிகாலை 2. 30 மணி தொடக்கம் 3 மணி வரை வேகமான காற்று வீசியதுடன் மழையும் பெய்ததாக மீனவர்கள் தெரிவித்தனர். இதன் போது, கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் தூக்கி வீசப்பட்டன. இதனால் 06 படகுகள் சேதமடைந்தன. இதில் ஒரு படகு அதன் இயந்திரம் என்பன பெரும் சேதத்துக் குள்ளாக்கப்பட்டன. ஏனைய படகுகள் பகுதியளவில் சேதமடைந்தன.



அத்துடன் கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த கடற்படையினரின் ஓலைக் கொட்டில் மற்றும் மீனவர்கள் பயன்படுத்தும் குடிசைகள் என்பன சேதமடைந்து காணப்படுகிறன. சேதமடைந்த தங்களது படகை திருத்தம் செய்து மீள பாவிப்பதற்கு தங்களிடம் போதியளவு பணமில்லையென பாதிக்கப் பட்ட மீனவர்கள் கவலையுடன் கூறினர்.

இதேவேளை, அச்சம் காரணமாக மீனவர்கள் நேற்று அதிகாலை கடற்றொழிலுக்குச் செல்லவில்லை.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் கூட்டணி ஆட்சி!

## ஓய்ந்துவிட்டதா மோடி அலை?

டில்லி, ஜூன் 06

**பத்து வருடங்களுக்குப் பின்னர் மத்தியில் மீண்டும் கூட்டணி ஆட்சி அமைகிறது. இதனால் 2024 மக்களவைத் தேர்தலில் மோடி அலை ஓய்ந்து விட்டதாகக் கருதப்படுகிறது.**



பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியாவின் மக்களவைத் தேர்தல் முடிவுகள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டது. இந்த முறை 370 தொகுதிகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்த பா. ஜ. கவுக்கு 240 இடங்களே கிடைத்துள்ளன. பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணிக்கு எதிர்பார்க்கப்பட்ட 400 இற்குப் பதிலாக 291 தொகுதிகளே கிடைத்துள்ளன. 11 நிறுவனங்களும், ஊடகங்களும் தேர்தலுக்குப் பின்னர் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் வெற்றியை அள்ளித் தந்திருந்தன. அனைவரும் ஒரே குரலில் 300 முதல் 400 வரையிலான தொகுதிகள் கிடைக்கும் எனக் கணித்ததும் தவறாகப் போனது.

காங்கிரஸ் தலைமையில் தொடங்கிய கூட்டணி ஆட்சி 2009 மக்களவைத் தேர்தலுக்குப் பிறகும் தொடர்ந்தது. இந்தக் கூட்டணி ஆட்சி நிலையை 2014 இல் மாற்றிக் காட்டிய மோடி அலை, 2024 இல் ஒய்ந்து விட்டதைக் காட்டுகிறது.

இதனால், பத்து வருடங்களுக்குப் பிறகு மத்தியில் மீண்டும் கூட்டணி ஆட்சி அமைய உள்ளது. மீண்டும் பா. ஜ. க. தலைமையில் ஆட்சி அமைக்கப்படுவதைத் தடுக்க எதிர்க் கட்சிகளின் கூட்டணியான இந்தியா கூட்டணி இப்போதே வியூகம் அமைக்கத் தொடங்கி விட்டது. இதற்கு ஏதுவாக இந்தியா கூட்டணிக்கு 234 தொகுதிகள் கிடைத்துள்ளன.

இந்தியாவில் கூட்டணி ஆட்சி புதிதல்ல. இது 1977 இல் ஜனதா கட்சியின் பேரில் ஆரம்பித்தபோது நிலைக்கவில்லை. பிறகு காங்கிரஸின் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஆட்சிக்கு பெரும்பான்மை இல்லை என்றாலும் அவர் பல்வேறு கட்சிகளின் மறைமுக ஆதரவுடன் ஆட்சியை நீட்டித்தார். தற்போதய சூழலில் கூட்டணி ஆட்சி அமைந்தால் மீண்டும் கட்சிகள் உடைப்பும் இருக்குமா? எனும் கேள்வி எழுந்துள்ளது. (எ)

# தேர்தலை வெற்றிகரமாக நடத்திய இந்தியாவுக்கு அமெரிக்கா பாராட்டு

வாஷிங்டன், ஜூன் 06



தேர்தல் பணிகளை வெற்றிகரமாக நடத்திமுடித்த இந்தியாவுக்கு அமெரிக்க அரசு பாராட்டு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் மொத்தமுள்ள 543 மக்களவைத் தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி முதல் ஜூன் முதலாம் திகதி வரை 7 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று முன்தினம் எண்ணப்பட்டன. இந்த வாக்கு எண்ணிக்கையின் முடிவில், புதிய ஆட்சி அமைக்கத் தேவையான 272 இடங்கள் எந்தக் கட்சிக்கும் கிடைக்கவில்லை. எனவே, மத்தியில் அமையும் புதிய ஆட்சி கூட்டணி ஆட்சியாகவே இருக்கும் என்ற நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையில் தேர்தல் குறித்து அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் மத்யூ மில்லர் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு,

“மாபெரும் தேர்தல் பணியை வெற்றிகரமாக நடத்தி முடித்த இந்திய அரசுக்கும், வாக்காளர்களுக்கும் அமெரிக்க அரசு சார்பில் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தலில் வெற்றி பெற்றவர்கள், தோல்வியடைந்தவர்கள் பற்றி நாங்கள் எந்தக் கருத்தும் கூறப்போவதில்லை. கடந்த 6 வாரங்களாக வரலாற்றின் மிகப் பெரிய ஜனநாயகப் பணியில் மக்கள் பங்கேற்று வாக்குச் செலுத்தியதை நாம் கண்டோம். இந்திய அரசு மற்றும் இந்திய மக்களுடன் அமெரிக்காவுக்கு நல்ல கூட்டுறவு இருந்து வருகிறது. இனிவரும் காலங்களிலும் அது தொடரும் என எதிர்பார்க்கின்றோம்” என்று தெரிவித்தார். (எ)

# சுரங்கத்தில் விஷவாயு கசிவு 11 பேர் மூச்சுத்திணறிப் பலி!


இஸ்லாமாபாத், ஜூன் 06

1,500 அடி ஆழத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் திடீரென ஏற்பட்ட விஷவாயு கசிவு காரணமாக 11 பேர் மூச்சுத்திணறிப் பலியாகினர். இந்தத் துயரச் சம்பவம் பாகிஸ்தானில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் ஏராளமான சட்டவிரோத சுரங்கங்கள் செயல்படுகின்றன. இந்தச் சுரங்கங்கள் அவ்வப்போது இடிந்து விபத்து ஏற்படுகிறது. எனவே, இதனைத் தடுக்க அரசாங்கம் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபடுகிறது.

இந்த நிலையில் பலுசிஸ்தான் மாகாணம் குவெட்டா நகரில் தனியாருக்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கம் செயல்படுகிறது. இங்கு வழக்கம் போன்று தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சுமார் 1,500 அடி ஆழத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது அந்தச் சுரங்கத்தில் திடீரென விஷவாயு கசிவு ஏற்பட்டது. சுரங்கத்தின் மற்ற பகுதிகளுக்கும் இந்த விஷவாயு வேகமாகப் பரவியது. இதனால் அங்கிருந்தவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக மயங்கி விழுந்தனர். தகவலறிந்த மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அங்கு சென்ற அவர்கள் சுரங்கத்துக்குள் முதலில் தூய காற்றை செலுத்தினர். இதனையடுத்து உள்ளே சென்று பார்த்தபோது சுரங்க மேலாளர், ஒப்பந்ததாரர் உள்ப்பட 11 பேர் மயங்கிக் கிடந்தனர். மீட்புப் படையினர் உடனடியாக அவர்களை மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

ஆனால், அவர்கள் அனைவரும் மூச்சுத்திணறி உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சுரங்கத்துக்கு சீல் வைக்கப்பட்டது. மேலும் இது குறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)



‘ஆக்சிஸ் மை இந்தியா’ நிறுவனத்தின்

# கருத்துக்கணிப்பு தவறானதால் கண்ணீர்விட்ட நிறுவுநர் குப்தா

டில்லி, ஜூன் 06



தேர்தல் கருத்துக் கணிப்பு நடத்தும் ‘ஆக்சிஸ் மை இந்தியா’ நிறுவனத்தின் தலைவர் பிரதீப் குப்தா, தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கண்கலங்கி அழுதார்.

முன்னதாக, பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 2024 மக்களவைத் தேர்தலில் 400 இடங்களை நிச்சயம் வெல்லும் என்று கருத்துக் கணிப்பு வெளியிட்டது ‘ஆக்சிஸ் மை இந்தியா’.

இந்த நிறுவனம் மட்டுமின்றி தேர்தல் குறித்து ‘இந்தியா ருடே’, ‘ரிபப்ளிக் ரிவி’ உள்ளிட்ட பல்வேறு ஊடகங்கள் வெளியிட்ட கருத்துக் கணிப்புகள் பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 350 - 400 தொகுதிகள் வரை கைப்பற்றி தனிப்பெரும்பான்மை பெறும் என்றே அறுதியிட்டுக் கூறின. ஆனால், தேர்தல் முடிவுகள் இதனுடன் ஒத்துப்போகவில்லை. பா. ஜ. க. கூட்டணியால் 294 இடங்களைத் தாண்ட முடியவில்லை. இந்தியா கூட்டணி சற்றும் எதிர்பாராத வகையில் 232 இடங்களை வென்றுள்ளது.

இந்த நிலையில், இந்தியா ருடே செய்தி தொலைக்காட்சி நடத்திய தேர்தல் முடிவுகள் பற்றிய விவாத நிகழ்ச்சியில் ‘ஆக்சிஸ் மை இந்தியா’ நிறுவனத்தின் தலைவர் பிரதீப் குப்தா பங்கேற்றார்.

அப்போது ‘ஆக்சிஸ் மை இந்தியா’ நிறுவனத்தின் கருத்துக் கணிப்பு பொய்த்துப்போனதை சுட்டிக்காட்டினார் நெறியாளர். இதனால், விவாதத்துக்கு இடையிலேயே கண்கலங்கி மனமுடைந்து அழுதார் பிரதீப் குப்தா.

பின்னர் நெறியாளர் உட்பட நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சக அரசியல் விமர்சகர்களும் சேர்ந்து ‘ஆக்சிஸ் மை இந்தியா’ நிறுவுநர் பிரதீப் குப்தாவுக்கு ஆறுதல் கூறினர். இது குறித்த காட்சிப்பதிவு சமூக வலைத்தளங்களில் அதிகளவில் வைரலானது. (எ)

# இஸ்ரேல் பிரதமருக்கு எதிராகப் பிடியாணையா? சர்வதேச நீதிமன்றத்துக்கு எதிராக போர்க்கொடி

வாஷிங்டன், ஜூன் 06

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்குஎதிரான பிடியாணை தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எதிராகத் தடைகளை விதிக்கும் சட்டமூலம் அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையிலுள்ள இஸ்ரேல் சார்பு குடியரசுகட்சி உறுப்பினர்கள் முன்மொழிந்த சட்டமூலத்தை பிரதிநிதிகள் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

அமெரிக்க குடியரசுக்கட்சி பெரும்பான்மை பெற்றுள்ள சனப்பிரதிநிதிகள் சபையில் 247 பேர் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர், 155 பேர் எதிராக வாக்களித்துள்ளனர்.

இஸ்ரேலை ஆதரிக்கும் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் அது சட்டமாக மாற்றப்படாது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

செனெட்டின் ஆதரவு கிடைத்தால் மாத்திரமே இந்த சட்டமூலம் சட்டமாகும். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்த சட்டமூலத்தை கடுமையாக எதிர்க்கின்றார் எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய பிரதமருக்கு வாழ்த்து சொல்ல ஞாயிறு டில்லி பறக்கின்றார் ரணில்!

## உறவை மேலும் வலுவாக்கவும் திட்டம்

கொழும்பு, ஜுன் 06

**இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்கு செல்கின்றார்.**

இந்திய தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், இந்தியாவின் புதிய பிரதமருக்கு நேரடியாகச் சென்று வாழ்த்து கூறும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டில்லி விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த விஜயமானது இரு நாடுகளின் உறவுகளின் வலுவான நிலையையும் இலங்கையின் பொருளாதார மீட்சியில் இந்தியாவின் ஒத்துழைப்புகள் இன்றியமையாத ஒன்று என்பதையும் எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளது.

எனவே தான் இந்திய தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் அங்கு பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைக்கவுள்ளது.

அந்த அரசாங்கத்துடன் ஒன்றித்து இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் புதிய பொருளாதார இணைப்புகளை துரிதப்படுத்தல் போன்றவற்றில் இலங்கையின் ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் டில்லி செல்கின்றார். (அ)

# மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில்!

கொழும்பு, ஜுன் 06

10 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை, நுவரெலியா, கண்டி, கொழும்பு, குருநாகல், காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இரத்தினபுரி மாவட்டத்தின் எலபாத்த, அயகம, பெல்மதுல்லை, குருவிட்ட, எஹெலியகொடை, இரத்தினபுரி, நிவித்திகல, கிரியெல்ல மற்றும் கலவானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள, மத்துகமை, பாலிந்தநுவர மற்றும் இங்கிரிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# மண்மேடு சரிந்து குழந்தை மரணம்

கொழும்பு, ஜுன் 06

கேகாலை பிரதேசத்தில் மண் மேடு சரிந்து 3 வயது குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் வீட்டின் பின்புறம் பாதுகாப்புச் சுவர் கட்டுவதற்காக நேற்று முன் தினம் காலை பள்ளம் தோண்டப்பட்டுள்ளது.

தோண்டப்பட்ட குறித்த பள்ளத்தில் குழந்தை இருந்த போது, அதற்கு மேல் இருந்த மண் மேடு குழந்தை மீது சரிந்து விழுந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பின்னர், அங்கு வந்த பிரதேசவாசிகள் குழந்தையின் மீது விழுந்த மண்ணை அகற்றி உடனடியாக கேகாலை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதை தவிர்க்குமாறு கோரிக்கை!

கொழும்பு, ஜுன் 06

உயர்கல்வி பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதை தவிர்க்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல மாணவர்கள் தங்கள் பரீட்சை முடிவுகளை முகநூலில் பதிவிடுவதைப் பார்க்கிறோம். அதை செய்யக்கூடாது. அந்த பரீட்சை எண்ணில் இருந்து வேறு ஒருவரின் விண்ணப்பம் அல்லது தேசிய அடையாள அட்டையின் எண் யாருக்காவது தெரிந்தால், அந்த விண்ணப்பத்தை நிரப்பினால், கேள்விக்குரிய மாணவருக்கு அதை மீண்டும் நிரப்ப இரண்டாவது வாய்ப்பு கிடைக்காது.

அது நடந்தால், நீண்ட காலத்திற்குப் பிறகு, முழு கணினி செயல்முறையையும் மாற்றிய பின்னரே சட்டபூர்வ உரிமையாளரால் இந்த அணுகலைப் பெற முடியும். அப்படி நடந்தால், அந்த மாணவர்களை ஆணைக்குழு பார்த்துக்கொள்ளும்.

ஆனால் தயவு செய்து உங்களது பரீட்சை எண்ணை சமூக ஊடகங்களில் வெளியிடுவதைத் தவிர்க்கவேண்டும்-என்றார். (அ)

# சிறுவன் மீது கொடூரமான தாக்குதல் நடத்திய நபர் பொலிஸாரால் கைது!

முல்லைத்தீவு, ஜுன் 06

சிறுவனொருவன் மீது கொடூரமாகத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புல்மோட்டை-ஆசிரிமலை பகுதியில் வைத்து குறித்த சந்தேகநபர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த தாக்குதலை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டின் கீழ், இரண்டு பெண்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மணலாறு-கல்யாணிபுரம் பகுதியைச் சேர்ந்த 45 வயதான பிரதான சந்தேகநபருடன், 37 மற்றும் 46 வயதான இரண்டு பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த 4 வயது குழந்தையை ஒருவர் கொடூரமான முறையில் தாக்கும் வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி வருவது குறித்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தனர்.

குறிப்பிட்ட சந்தேகநபர் தனது வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்த குழந்தையை கொடூரமாக தாக்கும் வீடியோவை பக்கத்து வீட்டுக்காரர் பதிவு செய்திருந்தார். இது சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் இந்தக் குழந்தையை சந்தேக நபர் தாக்கியிருந்த போதிலும் அவருக்குப் பயந்து எவரும் பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)



# அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் 22ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜுன் 06

மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சிவசிதம்பரத்தின் 22 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நேற்று காலை முன்னெடுக்கப்பட்டன.

நெல்லியடியில் அமைந்துள்ள சிவசிதம்பரத்தின் சிலையடியில் குறித்த நினைவு தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது. இந்த நினைவேந்தலில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான எம். கே. சிவாஜிலிங்கம், கேசவன் சயந்தன், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நிதி இராஜாங்க அமைச்சருடன் நடந்த கலந்துரையாடல் தோல்வி

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜுன் 06

அதிபர் - ஆசிரியர்களின் வேதன பிரச்னை தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தோல்வியடைந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்தார்.

இதற்கமைய, எதிர்வரும் 12ஆம் திகதியும் 26ஆம் திகதியும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டு பாதீட்டுத் திட்டத்தின் ஊடாக அரச பணியாளர்களின் வேதன பிரச்னையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அதிபர் - ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் வேதன அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டார். (அ)

# வெள்ள அபாயம் குறைகிறது

கொழும்பு, ஜுன் 06

களனி கங்கை, களுகங்கை மற்றும் அத்தனகலு ஓயா ஆகிய பகுதிகளில் ஏற்கனவே இருந்த அபாய நிலை படிப்படியாக குறைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் சுகுரா தில்தாரா தெரிவித்தார்.

இதன் காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கம்பஹா, ஜாஎல, வத்தளை, மினுவாங்கொட, கட்டான ஆகிய பகுதிகளில் படிப்படியாக நீர்மட்டம் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, களனி கங்கைப் படுகையின் தாழ்வான பகுதிகளான கடுவெல, பியகம, கொலன்னாவை, வத்தளை மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் நீர் மட்டம் படிப்படியாகக் குறைந்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவுகளின்...

இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, சோற்றுப் பொதி, பிறைட் றைஸ் மற்றும் கொத்து ரொட்டி என்பன 25 ரூபாயும், சிற்றுண்டி வகைகள், பால் தேநீர் உள்ளிட்டவை 10 ரூபாயாலும் குறைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தேர்தல்...

இதனைத் தெரிவித்தார்.

மேலும், உரிய காலத்தில் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. இதில் எந்த மாற்றமும் இல்லை. அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமது கட்சியின் நிறுவுநர் தலைவர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் பல கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

இருவரும் தேர்தல் விடயங்கள் மற்றும் நாட்டில் முன்னெடுக்கப்படும் அடுத்த கட்ட பொருளாதார நகர்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளனர். இருப்பினும் கலந்துரையாடல்களின் பின்னரான தீர்மானத்தை இரு தரப்பினரும் இன்னமும் வெளிப்படுத்தவில்லை. ஆகவே, ஜனாதிபதியின் தீர்மானத்தை அடுத்தே எமது முடிவை அறிவிக்கவுள்ளோம் - என்றார். (ஐ)

## ஐ.நா...

விதமாக நேற்று பாராளுமன்றில் விசேட கூற்றை முன்வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றினார்.

இதன்போது, உலகில் அதிக எண்ணிக்கையான மக்கள் தொகை இருக்கும் இந்தியாவுக்கு ஐக்கிய நாடு கள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமையை வழங்குவது தற்போது மிகவும் முக்கியமானது.

விசேடமாக உலகளாவிய அதிகார கேந்திர நிலையங்களை பார்க்கும்போது உண்மையாகவே இந்தியாவுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமை வழங்குவது நிச்சயமாக செயல்படுத்தக்கூடியதாகும். எனவே, இந்தியாவுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிர்ந்தர உறுப்புரிமையை வழங்கவேண்டும் என்ற பிரேரணை இந்த சபைக்கு முன்வைக் கிறேன். பாராளுமன்றத்தில் இருக்கும் 225 பேரும் இதனை அனுமதிப்பர் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது - என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

## தமிழ்மக்கள்...

சபைக் கூட்டம் 05.06.2024 புதன்கிழமை (நேற்று) யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

இதில், இதுவரை வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புகளின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட தமிழ் குடிமக்கள் சமூகத்தின் கட்டமைப்பை இனிமேல், "தமிழ் மக்கள் பொதுச்சபை" என அழைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்து முடித்தவுடன் பரஸ்பர புரிந்துணர்வு அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி செயல்படுவது என ஏகமன தாக முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன், தமிழ் மக்கள் பொதுச் சபைக்கான 9 உறுப்பினர்களைக் கொண்ட வழிகாட்டல் குழுவும் 25 பேரை உள்ளடக்கிய தலைமை ஒருங்கிணைப்பு குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தலைமை ஒருங்கிணைப்புக் குழுவில் இருந்து தமிழ் மக்கள் சபைக்குரிய செயல் குழுக்கள் தெரிவுசெய்யப்படும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதத்தின் இறுதி சனிக்கிழமைகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ் மக்கள் பொதுச் சபை கூடி தேவையான முடிவுகளை எடுக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஐ)

## தமிழ் பொது...

இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வழங்கி வரும் ஆணையை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் நிராகரித்து வருகின்ற நிலையில் தேர்தல்கள் தொடர்ச்சியாக நடத்தப்படுவதற்கு அப்பால் தமிழ் மக்களின் ஆணையை ஏற்றுக்கொள்வதற்கான அழுத்தங்களையும் பிரயோகிக்க வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவினர் நேற்றுமுன்தினம் இரா. சம்பந்தனை அவரின் இல்லத்துக்கு சென்று சந்தித்தனர். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தமது நீண்டகால அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே ஒவ்வொரு தேர்தல்களிலும் ஆணை வழங்கி வருகிறார்கள். இருப்பினும் அவர்கள் வழங்கி வருகின்ற ஆணையை கருத்தில் கொள்ளாது கருமங்களை முன்னெடுக்கின்ற செயல்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

ஆகவே ஐரோப்பிய ஒன்றியக்குழு உட்படச் சர்வதேச சமூகம் தேர்தல்களை நடத்துவதற்கான அழுத்தங்களை அளிப்பதற்கு அப்பால் தமிழ் மக்கள் வழங்கும் ஆணையை உறுதிப்படுத்துமாறு அழுத்தங்களை அதியுச்சமாகப் பிரயோகிக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் செய்து கொண்ட உடன்பாடுகளையோ, சர்வதேசத்துடன் செய்த உடன்பாடுகளையோ ஏற்று நடைமுறைப்படுத்துவதாக இல்லை. அரசமைப்பில் உள்ள விடயங்களைக்கூட அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதில் தயக்கங்களைத் தொடர்ச்சியாகக் காண்பித்து வருகின்றது.

தமிழ் மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். ஆகவே, அந்த உரித்து தொடர்ச்சியாக மறுக்கப்படுகின்றபோது நிச்சயமாக வெளியக சுயநிர்ணய உரித்தையும் கோருவதற்கான நிலைமைகளே உருவாகும் - என்றார். (ஐ)

## இந்தியப்...

தெலுங்கு தேசம் கட்சி, நிதிஷ் குமாரின் ஜனதா தளம் கட்சிகள் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சிக்கு நேற்றைய தினம் தமது ஆதரவை உறுதிப்படுத்தின. இதையடுத்தே, பா. ஜ. க. தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கவுள்ளது.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி முதல் கடந்த முதலாம் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெற்றன. தேர்தல் முடிவுகள் நேற்று முன்தினம் காலை முதல் வெளியாகின.

தேர்தல் முடிவுகளின்படி, எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைப்பதற்கு தேவையான 272 ஆசனங்கள் கிடைக்க வில்லை. மோடி தலைமையிலான பாரதிய ஜனதா (பா. ஜ. ) கட்சி 240 ஆசனங்களையே பெற்றது. எனினும், பா. ஜ. கட்சி தலைமையிலான கூட்டணி 293 ஆசனங்களை பெற்றது.

காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி 234 ஆசனங்களையும் கைப்பற்றியிருந்தன.

இந்த நிலையில், கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அமைக்கவுள்ளது. நேற்று நடந்த கூட்டத்தில் இது தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டன என்று தெரிய வருகின்றது.

இந்த நிலையில், மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வசதியாக பிரதமர் மோடி தனது பதவியை இராஜிநாமா செய்தார். அத்துடன், 17ஆவது பாராளுமன்றத்தை கலைக்கவும் பரிந்துரை செய்து அதற்கான கடிதத்தை இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் நேரில் கையளித்தார். மோடியின் இராஜிநாமாவை ஏற்ற ஜனாதிபதி புதிய அரசாங்கம் அமையும் வரை நிழல் பிரதமராக மோடியை செயல்படுமாறு கேட்டுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் சிவகுமாரனுக்கு அஞ்சலி!



யாழ்ப்பாணம், ஜூன் 06

ஈழப் போராட்ட வரலாற்றின் முதல் வித்தான பொன். சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு உரும்பிராயில் அவரின் சிலை அருகே நேற்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு போராளிகள் நலன்புரி சங்கத்தால் பேரெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் தலைவர் ஈஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து மலர் வணக்க நிகழ்வு இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து சிவகுமாரனின் திருவுருவசிலை அமைந்துள்ள இடத்தின் பின்பக்க மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது, சிவில் சமூக பிரதிநிதிகள், அரசியல் கட்சி அங்கத்தவர்களின் சிற்றுரைகளைத் தொடர்ந்து மாணவ, மாணவிகளுக்கு பாடசாலை பைகள் வழங்கி வைக்கப்பட்டன. அதனை தொடர்ந்து 50 கொய்யா மரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் போராளிகள் நலன்புரி சங்கத்தினர், வலிகாமம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், முன்னாள் மாநகர சபை பிரதி மேயர் ஈசன், அரசியல் ஆய்வாளர் சி. அ யோதிலிங்கம் மற்றும் பொதுமக்கள் உணர்வெழுச்சியுடன் பங்குபற்றினர். (ஐ)

# சஜித், அநுர வடக்குக்கு வருகின்றனர்

கொழும்பு, ஜூன் 06

ஜனாதிபதி தேர்தலில் வடக்கு தமிழ் மக்களின் ஆதரவை கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸநாயக்க ஆகியோர் வடக்கு மாகாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எதிர்வரும் ஞாயிறுக்கிழமை முதல் வியாழன் வரையாக ஒரு வார காலத்துக்கு வடக்கில் தங்கியிருப்பார் என்று அறிய வருகின்றது. .

இதேவேளை மக்கள் முன்னணி சார்பு ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கவும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்துக்கு...

மக்களுக்கு எந்தவித பிரச்னைகளும் ஏற்படாதவாறு தீர்க்கமான முடிவை எட்டும் நோக்கில் நேற்று புதன்கிழமை நடத்தப்பட்ட கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்கள், இரணைமடு கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, இரணைமடு தண்ணீர் பங்கீடு தொடர்பான இறுதிப்படுத்தப்பட்ட புதிய நவீன ஆய்வுகளுக்கு அமைவாக சிவில் அமைப்புகள், விவசாய அமைப்புகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ. நா. நீர் முகாமைத்துவம், யாழ். பல்கலைக்கழகம், நீர்ப்பாசன திணைக்களம், ஐ. நா. உணவு மற்றும் விவசாய அமைப்புகள் ஆகிய அமைப்புகளின் தீர்மானமிக்க ஆய்வு அறிக்கையை 6 மாதங்களுக்குள் பெற்ற பின்னர் இது குறித்து தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், த. சித்தார்த்தன், இ. அங்கஜன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## புதிய விடியல்...

மாதகல் சென். தோமஸ் கழகங்க ளின் அணிகள் மோதின. மிகவும் விறுவிறுப்பாக 1 : 1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி - தோல்வியை தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில், 4 : 3 என்ற கோல் கணக்கில் மாதகல் சென். தோமஸ் அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் தீவகம் அம்பிகை நகர் மகேஸ்வரி கழகமும் வடமராட்சி அண்ணாசிலையடி விளையாட்டுக்கழகமும் மோதின. இந்தப் போட்டியில் 2 : 0 என்ற கோல் கணக்கில் அண்ணாசிலையடி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

நேற்றைய தினம் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், 'புதிய விடியல்' ஏற்பாட்டாளர் ப. தயாளன், டான் தொலைக் காட்சி குழுமத்தின் பிரதம செயல்பாட்டு அதிகாரி இ. செல்வசந்திரன் 5 உதைபந்தாட்ட லீக்குகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர். (ஐ)

## யாழ்.இளைஞர்...

வழங்கிய போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி கனடாவுக்கு செல்வதற்காக விமான நிலையத்துக்கு வந்தபோதே அங்கு வைத்துக் கைது செய்யப்பட்டார்.


இவ்வாறு கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 34 வயது இளைஞராவார். இவர், நாட்டை விட்டு வெளியேறுவதற்கு திருகோணமலை நீதிமன்றம் தடை விதித்திருந்தது. இந்த நிலையில், போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி குறித்த இளைஞர் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயன்றுள்ளார். இதற்காக அநுராதபுரத்திலுள்ள முகவர் ஒருவருக்கு ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்க தயாராக இருந்தார் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையுடன் இந்தியா புதிய இராஜதந்திர உறவு

## வெற்றி பெற்ற பிரதமர் மோடி அறிவிப்பு



புதுடில்லி, ஜூன் 06

**இந்தியப் பொதுத் தேர்தலில் தமது கூட்டணி வெற்றி பெற்றுள்ள நிலையில், இலங்கையுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

தனது வெற்றியைத் தொடர்ந்து வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோருக்கு நன்றிகளையும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து 'எக்ஸ்' தளம் ஊடாக அனுப்பிய செய்திக்கு பதிலளித்த மோடி, "இந்தியா - இலங்கை பொருளாதார கூட்டுறவில் எங்களது தொடர்ச்சியான ஒத்துழைப்பை நான் எதிர்பார்க்கிறேன்." என்றார்.

பா.ஜ.க தலைமையிலான என்டிஏ கூட்டணியின் வெற்றிக்கு ஜனாதிபதி ரணில் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். இது மோடியின் தலைமையின் கீழ் முன்னேற்றம் மற்றும் செழிப்பு ஆகியவற்றில் இந்திய மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது என்று அவர் கூறினார்.

அத்துடன், "நெருங்கிய அண்டை நாடான இலங்கை இந்தியாவுடனான கூட்டுறவை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது" என்றும் ஜனாதிபதி ரணில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் வாழ்த்துகளுக்கு நன்றி தெரிவித்த மோடி, இலங்கையுடனான எமது உறவுகள் சிறப்பானது மற்றும் தனித்துவமான சகோதரத்துவமானது - என்றார்.

எங்கள் அண்டை நாடு முதல் கொள்கைக்கு இணங்க எங்கள் பிரிக்க முடியாத பிணைப்புகளை மேலும் வலுப்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்," என்று சஜித் பிரேமதாச வெளியிட்ட செய்திக்கு மோடி பதிலளித்துள்ளார்.

இதனிடையே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நண்பர் என விளித்திருந்த மோடி, இந்தியா - இலங்கை கூட்டாண்மை புதிய எல்லைகளை பட்டியலிடுகையில், உங்கள் ஆதரவை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்" என்று மோடி பதிலளித்தார்.

அத்துடன், சரத் பொன்சேகாவின் வாழ்த்து பதிவுக்கு பதிலளித்துள்ள மோடி, இலங்கையுடனான எமது உறவுகள் விசேடமானவை.

மேலும் அதை ஆழப்படுத்தவும் வலுப்படுத்தவும் நாங்கள் தொடர்ந்து மக்களுடன் இணைந்து பணியாற்றுவோம்" என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# ரணில் - மகிந்த இடையே மிகவிரைவில் சந்திப்பு!

கொழும்பு, ஜூன் 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுக்கும் இடையிலான முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று வெகு விரைவில் நடைபெறவுள்ளது.

குறித்த சந்திப்பு இவ்வாரம் அல்லது ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னதாக நடைபெறும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

மொட்டு கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட பிரமுகர்கள் இச்சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை கேட்டறிவதும், அரசின் எதிர்கால பயணப்பாதை பற்றியும் கலந்துரையாடும் நோக்கிலேயே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை கேட்டறிந்த பிறகே தமது கட்சியின் நிலைப்பாட்டை அறிவிக்கும் முடிவை மொட்டு கட்சி எடுத்துள்ளது. (அ)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 பேர் நேற்று இராமேஸ்வரத்தில் தஞ்சம்



சென்னை, ஜூன் 06

முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் நேற்று இந்தியா - இராமேஸ்வரத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

ஒரு சிறுவன், ஒரு சிறுமி உட்பட ஆறு பேரே ராமேஸ்வரம் சேராங்கோட்டை கடற்கரை பகுதியில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இதனை அடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற மரைன் பொலிஸார் அகதிகளாக வந்தவர்களை மீட்டு விசாரணைக்காக மண்டபம் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக ஈழத் தமிழர்கள் வாழ வழியின்றி அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீரற்ற காலநிலை; 30 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 06

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று காலை 30 ஆக உயர்ந்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் இதனை குறிப்பிட்டார்.

இதன்படி, உயிரிழந்தவர்களின் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு மற்றொரு இழப்பீடு வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வரும் நிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இறுதிச் சடங்குகளுக்காக 25,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவலவின் கேள்விக்கு பதிலளித்த அவர், 71 வீடுகள் முழுமையாகவும், 93,770 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மதிப்பிடும் பணியை முடித்த பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் பல்கலை. ஊழியர்கள் போராட்டம்

கொழும்பு, ஜூன் 06

அனைத்து பல்கலைக்கழக் கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக் கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான கூட்டத்தின்போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவனுடன் தமது தொழில்சார் பிரச்னைகள் தொடர்பாக நடத்திய கலந்துரையாடல் தீர்வின்றி முடிவடைந்ததாக அதன் இணைச் செயலாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், மே 2 ஆம் திகதி தொடங்கிய வேலைநிறுத்தம் இன்னும் தொடர்கிறது.

இராஜாங்க அமைச்சர் ராகவன் உடன் இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அரசாங்கம் எமக்கான தீர்வுகளை முன்வைத்தது.

ஆனால் நாம் இவற்றை எழுத்துபூர்வமாக கோரியுள்ளோம். அந்த சுற்றறிக்கை கிடைத்தவுடன் வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாம் - என்றார். (அ)

# 1,700 ரூபாய் சம்பள வெற்றிக் கொண்டாட்டம்



ஹற்றன், ஜூன் 06

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1, 700 ரூபாய் சம்பளம் தொடர்பாக நீதிமன்றத்தில் வெளியான தீர்ப்பையடுத்து தொழிலாளர்கள் பட்டாசு கொழுத்தி பாற்சோறு சமைத்து சந்தோசங்களைப் பகிர்ந்து கொண்டனர். வனராஜா மணிக்கவத்தை மற்றும் வனராஜா வோர்லி ஆகிய தோட்டப்பகுதியிலுள்ள தொழிலாளர்கள் சந்தோசத்தை பகிர்ந்து கொண்டனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த 1,700 ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க முன் நின்று பாடுபட்ட நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொழில் அமைச்சர் மனுஷ்க நாணயக்கார, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு மக்கள் நன்றியைத் தெரிவித்தனர். (எ)

# இலங்கையில் நீரில் மூழ்கி இந்தியத் தம்பதி உயிரிழப்பு

மாத்தறை, ஜூன் 06

மாத்தறை, கிரிந்த கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த இந்தியத் தம்பதியினர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக கிரிந்த பொலிஸார் தெரிவித்தனர்.

35 வயது ஆணும் 33 வயது பெண்ணுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

இவர்கள் இருவரும் சுற்றுலாவுக்காக குடும்பத்தினருடன் இலங்கைக்கு வருகை தந்த நிலையில் கிரிந்த கடற்கரையில் நீராடிக் கொண்டிருக்கும் போது திடீரென நீரில் மூழ்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இருவரும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலங்கள் தெபரவெவ மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org